CONSERVE ®
KANGAYAM

# சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம் – நல்கை விண்ணப்பம்



kangayambull.com

# SKCRF




**சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம் (SKCRF) அகவிடப்பாதுகாப்பு (In Situ Conservation) முறையில் காங்கயம் கால்நடைகள் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. இது திருப்பூர் மாவட்டம் குட்டப்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ளது.**

இது கால்நடைப் பாதுகாப்பிற்கான வள மற்றும் ஆராய்ச்சி மையமாக விளங்குகிறது. காங்கய இன மாடுகள் அவைகளின் மேய்ச்சல் நிலமான கொரங்காடு என்று அழைக்கப்படும் சில்வி மேய்ச்சல் நிலம் (Silvi Pastoral Land) இவைகளையொட்டி காலம் காலமாக உருவாகிவந்த வேளாண்முறைகள் கொங்கு நிலப்பரப்பிற்கென தனித்துவம் பெற்ற அம்சங்களாகும். மேலும் இந்நிறுவனம் நாட்டின மாடுகள் வளர்ப்பு, வளர்ப்போர், அதையொட்டிய வேளாண்மை, பாரம்பரிய அறிவு, உயிரியப்பண்பாட்டு மரபுகள் (**Biocultural Values**) என பலதரப்பட்டவையை பேணி பாதுகாத்து வருகிறது. இப்பிரசுரம் இப்பணிகளைத் தொடர்ந்து செய்வதற்கான நல்கையை வேண்டும் விண்ணப்பமேயாகும்.



# SKCRF இன் பங்களிப்பும் சாதனைகளும்:

## விழிப்புணர்வு:

நம் நிலச்சூழலுக்கு ஏற்றார்போல் மரபுவழி வேளாண்மையை மேம்படுத்த மாட்டின் சாணம், சிறுநீர் ஆகியவற்றைப் பயன்படுத்தி வேளாண்மையை திறம்பட செய்வதற்கான விழிப்புணர்வை SKCRF தொடர்ந்து உருவாக்கிவருகிறது. இது மக்கள் ஆரோக்கியத்துடன் வாழ வழி செய்கிறது. ரசயான உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்துவதை தவிர்ப்பதனால் உடல் நலத்தைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் அந்நிய செலாவணியையும் கட்டுப்படுத்த உதவுகிறது..

## கால்நடை இனப்பெருக்கம்:

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 150 பசுக்களின் இனச்சேர்க்கைக்கு காங்கய காளைகள் நிறுவனத்தின் பண்ணையிலிருந்து அனுப்பிவைக்கப்படுகிறது. இதனால் நோயற்ற உயர்தர பசுக்கள், காளைகள் உருவாக்கப்படுகிறது.

## பயிற்சி அளித்தல்:

கால்நடை பராமரிப்பு, செலவில்லா இயற்கை வேளாண்மை ஆகியவற்றில் பல்வேறு தரப்பினருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிகளைப் பெறுபவர்கள் தங்குவதற்கு விருந்தினர் விடுதிகள் தேவைப்படுகிறது, விடுதிகள் இருந்தால் மேலும் பல பயிற்சிப் பட்டறைகள் நடத்தலாம்.

## கண்ணபுரம் கால்நடைச் சந்தை

வரலாற்று காலந்தொட்டு திருச்சி-கோவை நெடுஞ்சாலையில் உள்ள கண்ணபுரம் என்ற இடத்தில் ஆண்டிற்கு ஒருமுறை கால்நடைச் சந்தை நடைபெறும். இச்சந்தையில் இளைஞர்கள், பெரியவர்கள், கால்நடை வளர்ப்பவர்கள், கால்நடை பராமரிப்பவர்கள் கலந்து கொள்வது வழக்கம். இச்சந்தையில் SKCRF காங்கயம் இன கால்நடைகள், கொரங்காடு பற்றிய கண்காட்சியினை நடத்தி வருகிறது. இதனால் மாடு விற்பனை அதிகரித்துள்ளது. இளைஞர்கள் மாடு வளர்ப்பதில் ஆர்வத்தைக் காட்டுகின்றனர்.

## அரசுடன் இணைந்து பணிபுரிதல்:

SKCRF மாநில அரசு மற்றும் நடுவண் அரசுடன் இணைந்து பணிபுரிந்து வருகிறது. தமிழ்நாடு அரசு கால்நடைகளுக்கான கண்காட்சியை அந்தந்த ஊரில் SKCRF ஆலோசனைப்படி நடத்தி வருகிறது. அதாவது காங்கய இன மாடுளை காங்கயத்திலும், உம்பளச்சேரி மாடுகளைப் பற்றி பொற்கையிலும் (நாகபட்டிணம்), பர்கூர் இன மாடுகளைப் பற்றி ஊசிமலையிலும் (ஈரோடு மாவட்டம்), புலியகுளம் மாடுகளைப் பற்றி சிவகங்கை மாவட்டத்திலும் மற்றும் ஆலம்பாடி மாடுகளைப் பற்றி கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் கண்காட்சிகளை நடத்தி வருகிறது. தேசிய திட்டக்குழுவின் ஒரு அங்கமான நாட்டின கால்நடைப் பாதுகாப்பு குழுவின் சார்பில் கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்படுகிறது.

## காங்கயம் கால்நடை பாதுகாவலர் விருதுகள், காங்கய கால்நடை திருவிழா / கண்காட்சி

SKCRF இன் கால்நடை திருவிழா / கண்காட்சி கொங்கு பகுதிகளில் பிரசித்தி பெற்றது. பல்லாயிரத்திற்கும் மேலானோர் பார்வையிட, நிகழ்வில் சிறந்த காளைகள் பசுக்கள், கன்றுகள், உழவு மாடுகள் காட்சிப்படுத்தப்படும். இவ்விழா மாணவர்கள், விவசாயிகள், மாடு வளர்ப்போர், மருத்துவர்கள். சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், சமயத் தலைவர்கள் என்று பலரை ஈர்க்கிறது. நானூறுக்கும் மேற்பட்ட காங்கய கால்நடை வளர்ப்போர் இந்நிகழ்ச்சியின் மூலம் பயன் அடைந்துள்ளனர். ஆண்டிற்கு நான்கு காங்கய கால்நடை வளர்ப்பவர்களுக்கு (ஒரு பெண் உட்பட) தேசிய மாட்டின காவலர்கள் என்ற பரிசினை வழங்க அரசுக்கு பரிந்துரை செய்துவருகிறது. இந்தப் பரிசு சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் கீழ்வரும் தேசிய பல்லுயிர் பாதுகாப்பு ஆணையத்தால் உருவாக்கப்பட்டது. மாநில, தேசிய, பன்னாடுகளில் நடைபெறும் பட்டறைகளுக்கும், பயிலரங்குகளுக்கும் காங்கய மாடு வளர்ப்பவர்கள் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

SUPP

## கன்றுகள் வழங்குதல்:

ஆண்டுதோறும் **SKCRF** பண்ணையிலிருந்து **20** காங்கய கன்றுகள் மிகக் குறைந்த விலையில் மாடு வளர்ப்பவர்களின் தேவையை அறிந்து வழங்கப்படுகிறது. **SKCRF** மாடு வளர்ப்பதை ஒரு மக்கள் இயக்கமாக உருவாக்கியுள்ளது. இதைத் தொடர்ந்து சமூக ஊடகங்கள், அச்சு மற்றும் தொலைக்காட்சி ஊடகங்கள் மூலமாகவும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் சந்திப்பின் மூலமாகவும், பயிற்சிப் பட்டறைகள் மூலமாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

## பயிலரங்குகள் / கண்காட்சிகள்

பயிலரங்குகளும் / கண்காட்சிகளும் **SKCRF** இன் பணிகளுள் மிக முக்கிய அங்கம் வகிக்கின்றன. **SKCRF** பல சர்வதேச, ஐக்கிய நாடுகளின் சபையின் பயிலரங்குகளில் பங்கேற்று கருத்துக்களை வழங்கி வருகிறது. பள்ளிகள், கல்லூரிகள், ஐக்கிய நாட்டு சபை பயிலரங்குகளிலும், கால்நடைச் சந்தைகளிலும், அரசு நிகழ்வுகளிலும் காங்கய பாதுகாப்பிற்கான கண்காட்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.






## சேனாபாதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையத்தின் பணிகள் தடையின்றி தொடர அறக்கட்டளைக்குத் தேவையானவற்றைக் காண்க:

### 01 அறக்கட்டளை வைப்பு நிதி (Corpus Fund)

### 02 தொடர்பணிகளுக்கான நல்கைகள்

- விழிப்புணர்வு நிகழ்வுகள் - கால்நடை விழா, கண்காட்சிகள் நடத்த, கால்நடைப் பராமரிப்புப் பயிற்சி வழங்க
- செலவில்லா இயற்கை வேளாண்மை - இயற்கை உரம் தயாரித்தல். பஞ்சகவ்யம், வேம்பு கரைசல், வேம்பு அஸ்தரம் தயாரித்தல் கொரங்காடு மற்றும் கால்நடை மேலாண்மை - இவைகளுக்கான பயிற்சி அளித்தல்
- ஆவணப்படுத்துதல், பிரசுரித்தல் ஆகியவற்றிற்கான உதவிகள்
- விஞ்ஞானபூர்வமாக பால் அதிகரிக்கும் மாடுகளை உருவாக்குதலுக்கான நல்கை
- பெண்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்

### 03 தேவைபடும் கருவிகள்

கணினிகள், மின்னணுவாக்கும் கருவிகள், கணினி செர்வர்

### 04 சொற்பொழிவிற்கான அறக்கட்டளை மானியங்கள்

### 05 கண்காட்சிகள் உருவாக்குதல்

### 06 பிற தேவைகள்

- நூலகம், அருங்காட்சியகம் அமைத்தல்
- குளிர்சாதனப் பெட்டிகள் இரண்டு
- காங்கயம் காளைகளின் விந்து சேமிப்புக் கிடங்கு
- நான்கு சக்கர வாகனம்
- கருத்தரங்கக் கூடம்
- பயிற்சியாளர்களுக்கான தங்கும் விடுதி

APP



## அறங்காவலர்களின் கோரிக்கை- நிதி நல்கைகள் வேண்டுதல்:

சேனாபதி காங்கேயம் கால்நடை ஆராய்ச்சி மையம் தொடர்ந்து திறம்படச் செயல்படுவதற்கு நன்கொடைகள் தேவைப்படுகின்றன.

கொடையாளர்கள், பெருநிறுவனங்கள், கொடை நிறுவனங்கள், புரவலர்கள், பண்பாட்டு ஆர்வலர்கள், கால்நடை ஆர்வலர்கள், தனிநபர்கள் அனைவரையும் நிதி நல்கை தந்து இப்பணிகளில் தங்களை இணைத்துக் கொள்ள SKCRF இன் அறங்காவலர்கள் அழைக்கின்றனர்.

நன்கொடைகள் அறக்கட்டளை வைப்பு நிதிக்காக (Corpus Fund), திட்டப்பணி -களுக்காக, அல்லது மேலே குறிப்பிட்டுள்ள தேவைகளுக்காக கொடுத்து உதவலாம். நன்கொடைகளை காசோலை மூலமாகவும் வங்கி பறிமாற்றம் மூலமாகவும் அளிக்கலாம், பொருளாகவும் அளிக்கலாம். நன்கொடைகளுக்கு வருமான வரி துறையின் 80G விலக்கு பெறப்பட்டுள்ளது.

**kangayambull.com**

EAL




## வங்கி விபரங்கள்

**ACCOUNT NAME:**
SENAAPATHY KANGAYAM CATTLE RESEARCH FOUNDATION

**ACCOUNT NO:** 045335100000 1072

**BANK:** LAKSHMI VILAS BANK

**BRANCH:** MUTHUR

**IFSC CODE:** LAVB0000453



kangayambull.com


## List of Patrons

- Holy Kailash Heritage Meikandar Hierarchy Perur Aadheenam Pontiff H.H Santhalinga Ramasamy Adigalar
- H. H. Kumaragurupara Swamigal
- Prof. M. S. Swaminathan
- Dr. S. V. Balasubramaniam
- Mr. S. Pathy
- Mrs. Vanitha Mohan
- Mr. Theodore Bhaskaran
- Mr. Sivaram
- Mr. Vasunathan
- Mr. Mohan Ramakrishnan
- Mr. Mohana Sundaram
- Mr. Justice Jaichandren
- Mr. Aravind Mani
- Mr. Radhakrishnan
- Mr. Sunny Narang
- Mr. Nanjappan Subramaniam
- Dr. Mariazeena Johnson
- Mr. Natarajan Arunachalam
- Mr. Kumarasamy Selvam
- Mr. Shiva kumar
- Mr. Jeevanantham
- Mr. A. Chandrasekaran
- Mrs. Kavitha K Pandian

## Board of trustees

- Aravind Nallathambi
- Deva Prakash
- Gunadaran. G
- Hima Anugula
- Karthikeya Sivasenapathy
- Meenaakshi Karthikeya
- Monika Agarwal
- S. K Nareinthiran
- Prabhu. M. J.
- Saminathan Sivasenapathy. K
- Saraswathy Sivasenapathy
- Sivasenapathy, E. N.
- Somasundaram
- Sundar Ganesan
- Swaminathan. L. P.

## List of Advisors

- Dr.Devinder Sadana
- Dr.G.Kumaravel
- Prof.Murugavel
- Dr.Sathyamoorthy
- Mr.N.R.Elango
- Mr.Amit Anand Tiwari
- Mr.Muthukumaran
- Mrs.S.Eswari Indrani






**SENAAPATHY KANGAYAM CATTLE RESEARCH FOUNDATION**

Kuttappalayam ( P.o. ), Kangayam Taluk, Tiruppur District,
Tamilnadu -638108. India

**P : + 91 4257 294234, 254504**
**M : + 91 96559 12456, + 91 80125 20456**

+91 73730 20456 www.facebook.com/SKCRF skcrf10@gmail.com